2003 மார்ச் 25] [திரு. ஜி. பழனிசாமி]

ஆணையத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. மின்சாரக் கட்டணத்தை உயர்த்த வேண்டும், இலவச மின்சாரம் கொடுக்கக்கூடாது என்று அப்படிச் சொல்வதற்கு நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு நன்மை செய்வதற்காகக் கட்டணத்தை நாம் உயர்த்திவிட்டு, வேறுவழியிலே நாம் அவர்களுக்கு உதவி செய்கிறோம் என்று சொல்கிறபோது....(குறுக்கீடு)

பிற்பகல் 1-30

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடிய விடிய இராமாயணத்தைக் கேட்டுவிட்டு இராமருக்கும் சீதைக்கும் என்ன உறவு என்று ஒருவர் கேட்டாராம். அதுபோல இருக்கிறது மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி பேசுவது. ஏற்கெனவே தெளிவாகப் பல முறை இங்கே சொல்லியாகிவிட்டது. இதனால், விதிக்கப்பட்டிருக்கின்ற புதிய கட்டணங்களால் ஏழை எளிய சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. அவர்களுக்கு ஒரு கட்டணம் என்று விதிக்கப்பட்டு இருக்கிறதே தவிர, அந்தக் கட்டணச் செலவு முழுவதையும் இந்த அரசே ஏற்றுக்கொள்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மணி, நாளைக்கு நீங்கள் பேச்சைத் தொடருங்கள்; 5 மணித்துளிகள் தருகிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (26-3-2003) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

46. 2001-2002-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் இருபத்தி எட்டாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

[2003 மார்ச் 25

47. 2001-2002-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் இருபத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

48. 2001-2002-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கிராபைட் நிறுவனத்தின் ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

49. 2001-2002-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் இருபத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

80. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து நான்காவது அறிக்கை. (2001-2003)

81. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து ஐந்தாவது அறிக்கை. (2001-2003)

82. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து ஆறாவது அறிக்கை. (2001-2003)

83. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து ஏழாவது அறிக்கை. (2001-2003)

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS